## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
## மேட்டூர் நகராட்சி

மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர் அவர்களால் 31.05.2019 ம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற உள்ளது.

### மன்றப் பொருள்

1) மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள Gassfire Crematorium 2018-2019ம் ஆண்டிற்கு Consent Fees ரூ. 10,200/- செலுத்தி மாசு கட்டுப்பாட்டு வாரியம் சேலம் அவர்களிடமிருந்து கேட்பு வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட தொகையினை மாசுகட்டுபாட்டு வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து செலுத்தலாம்.
3. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்னனுமதி தந்து மன்ற அனுமதியினை எதிர்நோக்கி ரூ.10,200/- மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு செலுத்தியமைக்கு மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.819/2019/இ1)**

**தீர்மான எண். 68 நாள். 31.05.2019**

**அனுமதிக்கப்பட்டது.**

2) மேட்டூர் நகராட்சியில் வளர்ச்சி பணிகள் குறித்து காலைக்கதிர் நாளிதழில் வெளியிட்டமைக்கு காலைக்கதிர் நாளிதழிலிருந்து பட்டியல் தொகை ரூ.9828/- வழங்குமாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட தொகையினை காலைக் கதிர் நாளிதழ்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்.
3. முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3802 /2010/இ1)**

**தீர்மான எண். 69 நாள். 31.05.2019**

**அனுமதிக்கப்பட்டது.**

3) மேட்டூர் நகராட்சி தேர்வு நிலை நகராட்சியாகும். இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் 165 துப்புரவு பணியாளர்கள் பணியிடம் அனுமதிக்கப்பட்டு, அதில் 83 துப்புரவு பணியாளர்கள் பணியிடம் காலியாக உள்ளது. குறைந்த துப்புவு பணியாளர்களைக் கொண்டு பொது சுகாதாரம் நல்ல முறையில் பேணிக்காக்க இயலாது என்பதால் தனியார் மூலம் 47 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பயன்படுத்திக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின்

செயல்முறைகள் உத்திரவு ந.க.எண்.K.Dis No.31096/பி3/2017 நாள்.10.01.18ல் அனுமதி வழங்கப்பட்டது. இவ்வுத்திரவின் படியும் இந்நகர்மன்ற தீர்மானம் எண்.33 நாள்.28.03.2018ன் படியும் வார்டு எண்.20 முதல் வார்டு எண்.30 முடிய 11 வார்டுகளில் 47 பணியாளர்களைக் கொண்டு ஒப்பந்த அடிப்படையில் (Out Sourcing) துப்புரவு பணி மேற்கொள்ள 20.04.2018 முதல் 19.04.2019 முடிய ஓராண்டிற்கு தனியார் நிறுவனமாகிய EESHA ASSOCIATES, DANISPET நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி செய்யப்பட்டு வருகிறது.

நாடாளுமன்ற தேர்தல் 10.03.2019ல் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதால் தேர்தல் நடத்தை விதிகள் 10.03.2019 முதல் 23.05.2019 வரை அமலில் இருப்பதால், தேர்தல் காரணமாக தனியார் மூலம் குப்பைகள் அகற்றும் பணிக்கு புதிய ஒப்பந்தம் ஏதும் கோர இயலாது என்பதாலும், பொது சுகாதாரப் பணியின் அவசியம் கருதி ஏற்கனவே 11 வார்டுகளில் துப்புரவு பணி செய்து வரும் EESHA ASSOCIATES, DANISPET தனியார் நிறுவனத்திற்கு ஏற்கெனவே தெரிவித்துள் அதே நிபந்தனைகளுக்குட்பட்டு 20.04.2019 முதல் 19.07.2019 முடிய மூன்று மாதங்களுக்கு பணி செய்ய உத்திரவு வழங்க துப்புரவு ஆய்வர் மற்றும் துப்புரவு அலுவலர் ஆகியோர் தங்களது 11.04.2019ம் தேதிய அறிக்கையில் பரிந்துறை செய்துள்ளனர்.

எனவே, பொது சுகாதார நலன் கருதி ஏற்கெனவே தனியார் மூலம் 11 வார்டுகளில் துப்புரவு பணி செய்து வந்த EESHA ASSOCIATES நிறுவனத்திற்கு ஏற்கெனவே தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு 20.04.2019 முதல் 19.07.2019 முடிய மூன்று மாதங்களுக்கு பணி நீட்டிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

**அ)** 83 துப்புரவு பணியாளர் பணியிடம் காலியாக உள்ளது. நகராட்சியின் பொறுப்பும், கடமைகளும் நடவடிக்கைகலும் பல்வேறாக விரிவடைந்து பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப பல மடங்காக அதிகரித்துள்ளது. மேலும் பல குடியிருப்புகள் உருவாகி நகராட்சியின் பராபரிப்பு பகுதி பன்மடங்கு விரிவடைந்துள்ளது. நகராட்சிகளில் சேவைப் பணிகளில் முக்கிய பணி துப்புரவு பணி என்பதால் நகராட்சியின் அனைத்து பகுதிகளிலும் குப்பைகள் அகற்ற இயலாது என்பதால் 20.04.2019 முதல் 19.07.2019 முடிய /eesha associates, DANISPET நிறுவனத்திற்கு ஏற்கெனவே தெரிவித்துள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு பணி நீட்டிப்பு செய்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ஆ**) அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.1251/2019/எச்1)**

**தீர்மான எண். 70 நாள். 31.05.2019**
**அனுமதிக்கப்பட்டது.**

**4)** மேட்டூர் நகராட்சியில் 30 வார்டுகளில் உள்ள தெருக்கள் மற்றும் சாலையோரம் வளர்ந்துள்ள புல் மற்றும் செடிகளை வெட்டுவதற்கு பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தி வரும் இரண்டு புல் வெட்டும் இயந்திரங்களுக்கு பெட்ரோல் மற்றும் ஆயில் தேவைப்படுவதால் 2019–2020 ம் ஆண்டிற்கு நேரடியாக M/S..மகாலட்சுமி டிரேடர்ஸ் (Indian Oil Dealers) மேட்டூர் அவர்களிடம் வாங்கிக் கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவு தொகை ரூ.60,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1) அனுமதிக்கலாம்.
2) இச்செலவு தொகையினை வருவாய் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1232/2019/எச்1)**
**தீர்மான எண். 71 நாள். 31.05.2019**
**அனுமதிக்கப்பட்டது.**

**5)** மேட்டூர் நகராட்சி பகுதிக்குள் கொசுக்களை கட்டுப்படுத்துவதற்கு 30 வார்டுகளில் உள்ள தெருக்கள் மற்றும் வீடுகளில் விடுதலின்றி பைத்திரம் மருந்து கொண்டு புகை அடிக்க, புகையடிக்கும் இயந்திரங்களுக்கு பெட்ரோல், டீசல் தேவைப்படுவதால் 2019–2020 ம் ஆண்டிற்கு நேரடியாக M/S..மகாலட்சுமி டிரேடர்ஸ் (Indian Oil Dealers) மேட்டூர் அவர்களிடம் வாங்கிக் கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவு தொகை ரூ.6,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1) அனுமதிக்கலாம்.
2) இச்செலவு தொகையினை வருவாய் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1233/2019/எச்1)**

**தீர்மான எண். 72 நாள். 31.05.2019**

**அனுமதிக்கப்பட்டது.**

**6)** திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் சேவைப் பணிகளில் பொது சுகாதாரத்தில் துப்புரவு பணி முக்கிய பணி என்பதால் இந்நகராட்சிக்கு துப்புரவு பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 165 பணியிடங்களில், தற்போது காலியாக உள்ள 83 துப்புரவு பணியாளர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளதால், 82 துப்புரவு பணியாளர்களைக் கொண்டு 30 வார்டுகளிலும், பொது சுகாதாரம் நல்ல முறையில் பாதுகாக்க இயலாது என்பதால், நகர்மன்ற தீர்மான எண்.172 நாள்.25.09.2017–ல் தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு பணிகள் மேற்க்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் அனுமதி கோரியதற்கு இணங்க, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடித எண். K.Dis.No.31096/P3/2017, நாள்.10.01.2018–ல் தனியார் மூலம் துப்புரவு பணியினை செய்ய ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சியரால் அனுமதிக்கப்பட்ட விலை விகிதப்படி 47 பணியாளர்களை அமர்த்திக் கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது. அதன்படி வார்டு எண்.20 முதல் 30 முடிய 11 வார்டுகளில் துப்புரவு பணியினை தனியார் மூலம் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியரால் அனுமதிக்கப்பட்ட விலை விகிதப்படி ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த அப்படையில் ஒப்பந்த புள்ளிகள் கோரியதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த EESHA ASSOCIATES என்ற தனியார் நிறுவனத்திற்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.33, நாள்.28.03.2018ல் அனுமதி பெறப்பட்டு இவ்வலுவலக செயல்முறை ந.கஎண்.3601/2017/எச்1, நாள்.06.04.2018ல் 20.04.2018 முதல் 19.04.2019 முடிய ஓராண்டிற்கு வார்டு எண். 20 முதல் வார்டு எண்.30 முடிய 11 வார்டுகளில் பணிபுரிந்து வர உத்திரவு வழங்கப்பட்டது. மேற்படி நிறுவனத்திற்கு உத்திரவு வழங்கிய ஓராண்டு பணிக்காலம் முடிவடைந்து விட்டதாலும் மேற்படி நிறுவனம் பணியாளர்களுக்கு செலுத்த வேண்டிய EPF, ESI மற்றும் இன்சூரன்ஸ் முறையாக செலுத்தாததால் நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படுவதாகவும் மேற்படி ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்த காலத்தினை நீட்டிப்பு செய்யாமல் 2019–2020ம் ஆண்டிற்கு புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோரலாம் எனவும் துப்புரவு அலுவலர் தனது 24.04.2019ம் தேதிய அறிக்கையில் தெரிவித்துள்ளார்.எனவே 2019–2020ம் ஆண்டிற்கு வார்டு எண்.20 முதல் 30 முடிய 11 வார்டுகளில் துப்புரவு பணியினை தனியார் மூலம் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியரால் அனுமதிக்கப்பட்ட விலை விகிதப்படி ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த அப்படையில் ஒப்பந்த புள்ளிகள் கோரி 47 பணியாளர்களை துப்புரவு பணிக்கு அமர்த்திக் கொள்ளவும், 1 வருட காலத்திற்கு இதற்காகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.79,00,000/–க்கும் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

(அ) தனியார் மூலம் வார்டு எண். 20 முதல் 30 முடிய 11 வார்டுகளில் துப்புரவு பணியினை ஒப்பந்த அடிப்படையில் 47 பணியாளர்களை மாவட்ட ஆட்சியரால் அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்தின்படி அமர்த்திக் கொள்ளவும், அதற்காகும் மதிப்பீட்டு தொகைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ஆ) ஒப்பந்தபுள்ளிகள் வரவேற்க தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(இ) இச்செலவினத்தை திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 1517/2019 /எச்1)**
**தீர்மான எண். 73 நாள். 31.05.2019**

**அனுமதிக்கப்பட்டது.**

7) இந்நகராட்சியின் 2016-2017ஆம் ஆண்டுக்கான தணிக்கைக் கட்டணம் ரூ.1,23,238/- செலுத்தப்பட வேண்டும் என உதவி இயக்குநர் -II, உள்ளாட்சி நிதித் தணிக்கை சேலம் அவர்களின் கடிதம் ப.வெ.எண்.11/அ1/2019 நாள்.28.02.2019, 25.04.2019 மற்றும் 17.05.2019 ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகை ரூ.1,23,238/- ஐ அரசுக் கணக்கில் செலுத்திடவும், அதற்காகும் செலவினத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 147/19 /அ2)**
**தீர்மான எண். 74 நாள். 31.05.2019**
**அனுமதிக்கப்பட்டது.**

8) மேட்டூர் நகராட்சி அலுவலகம் மற்றும் நகராட்சி வாசகசாலை ஆகிய இடங்களுக்கு கீழ்க்கண்டுள்ள நாளிதழ்கள் 2019-2020 ஆம் ஆண்டில் தொடர்ந்து வாங்கி கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.50,000/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. தினத்தந்தி
2. தினமணி
3. தினகரன்
4. காலைக்கதிர்
5. ஹிண்டு
6. தினமலர்

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 1171/2018 /டி1)**
**தீர்மான எண். 75 நாள். 31.05.2019**
**அனுமதிக்கப்பட்டது.**

9) இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு 2019-2020 ஆம் ஆண்டிற்கு அஞ்சல் வில்லைகள் வாங்கி கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.50,000/- க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 1172/2018 /டி1)**
**தீர்மான எண். 76 நாள். 31.05.2019**
**அனுமதிக்கப்பட்டது.**

10) மேட்டூர் நகராட்சி, சேலம் மாவட்டத்திலுள்ள தேர்வு நிலை நகராட்சியாகும். நகராட்சியின் மக்கள் தொகை 2011–ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி 52813 ஆகும். நகராட்சியின் பரப்பளவு 14.55 சதுர கி.மீ மற்றும் மொத்தம் 30 வார்டுகள் கொண்டது, தற்போதைய மக்கள் தொகை 55200 ஆகும்.

முதல் குடிநீர் திட்டம்

இந்நகராட்சியின் பிரதான குடிநீர் ஆதாரம் மேட்டூர் அணையில் கீழ் பகுதி காவிரி ஆறு ஆகும் இந்நகருக்கான முதல் குடிநீர் திட்டம் மேட்டூர் நகரியமாக இருந்த போது மேட்டூர் அணை கட்டுமானப் பணியின் ஆரம்ப நிலையில் மேட்டூர் நகரியத்திற்கு உட்பட்ட பகுதிக்கு மட்டும் 1928ல் பொதுப்பணித்துறை மூலம் காவேரி ஆற்றில் இயல்பு நீரேற்று நிலையம் 50HP மோட்டார் நிறுவப்பட்டு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு 18.50 கி.மீ. நீளத்திற்கு பகிர்மானக்குழாய்கள் அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டது. இத்திட்டத்தில் 18.00 இலட்சம் லிட்டர், 9.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட இரு நீர்தேக்க தொட்டிகள் கட்டப்பட்டன. பின்பு 1975ல் குடிநீர் அபிவிருத்தி திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் இரண்டாவது இயல்பு நீரேற்று நிலையம் 100HP மோட்டார், நீர் உந்து நிலையம் மற்றும் நீரேற்று நிலையம் அமைக்கப்பட்டு 44.00 கி.மீ. நீளத்திற்கு பகிர்மானக்குழாய்கள் அமைக்கப்பட்டது. இத்திட்டத்தில் 1.50 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி ஒன்று கட்டப்பட்டது. அதன் மூலம் குடிநீர் விநியோம் செய்யப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் தற்சமயம் 5.35MLD குடிநீர் கிடைக்கப் பெறுகிறது.

இரண்டாவது குடிநீர் திட்டம்

ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் (UIDSSMT) கீழ் ரூ.1247.19 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேட்டூர் நகராட்சிக்கு மட்டும் " குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்'' – (இரண்டாவது திட்டம் ) மேற்கொள்ளப்பட்டு உச்சபட்சமாக கூடுதலாக 3.00 MLD குடிநீர் பெறும் வண்ணம் பணிகள் முடிக்கப்பட்டு நகராட்சி வசம் 02/2016–ல் ஒப்படைக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இயல்பு நீரேற்று நிலையம் 3.00 MLD திறன் கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் 4.630 கி.மீ தூரமுள்ள பிரதான குழாய்கள், நான்கு இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் (2.60 LL, 2.80 LL, 3.50 LL, 2.70 LL) மற்றும் 65.16 கி.மீ தூரத்திற்கு பகிர்மானக் குழாய்கள்

அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் தினமும் 2.10 MLD குடிநீர் 29.06.2015 முதல் கிடைக்கப் பெறுகிறது.

**தற்போதைய நிலை :**

நகராட்சியின் பிரதான குடிநீர் ஆதாரம் மேட்டூர் அணையின் கீழ்பகுதியில் காவிரி ஆறு ஆகும். நபர் ஒருவருக்கு 135 லிட்டர் என்ற விகிதத்தில் நகராட்சியின் தினசரி குடிநீர் தேவை 71.30 இலட்சம் லிட்டர் ஆகும். கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு தினசரி 74.50 இலட்சம் லிட்டர் குடிநீர் பெறப்பட்டு நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 140 லிட்டர் என்ற அளவில் தினசரி பொதுமக்களுக்கு 74.50 இலட்சம் லிட்டர் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. மேலும் நகரில் உள்ள 112 விசைப்பம்புகள் 6 கைபம்புகள் ஆகியவற்றின் மூலம் குடிநீர் அல்லாத பிற காரணங்களுக்காக 5.10 இலட்சம் லிட்டரும், நகராட்சி குடிநீர் லாரி மூலம் தினசரி 36000 லிட்டர் குடிநீர், பகிர்மானக் குழாய் இல்லாத பகுதிகளுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| மேட்டூர் நகரிய மற்றும் அபிவிருத்தி குடிநீர் திட்டம் | – | 53.50 இலட்சம் லிட்டர் |
| மேட்டூர் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் | – | 21.00 இலட்சம் லிட்டர் |
| **மொத்தம்** | – | **74.50 இலட்சம் லிட்டர்** |

தற்சமயம் நாள் ஒன்றுக்கு இரு திட்டங்கள் மூலம் 74.50 இலட்சம் குடிநீர் வழங்கப்படுகிறது. நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 140 லிட்டர் வீதம் தினசரி ஒன்றரை மணி நேரம் நகரின் அனைத்து பகுதிகளுக்கும் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

மேற்கண்டவாறு உள்ள இரு குடிநீர் திட்டங்களில் புதிய குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு பணியிடங்கள் தோற்றுவிக்கப்படாததால் குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தினை பராமரிக்க பணியாளர்களை தனியார் மூலம் (Out Sourcing) ஏற்பாடு செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.23651/2013/DO1 நாள்.12.01.2017ல் அனுமதி பெறப்பட்டு தனியார் பணியாளர்கள் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. பழைய குடிநீர் திட்டத்தினை பராமரிக்க கீழ்க்கண்ட பணியிடங்களுக்கு அரசின் அனுமதி பெறப்பட்டு அவற்றில் கீழ்க்கண்டவாறு பணியிடங்கள் காலியாக உள்ளது.

இந்நகராட்சியின் செலவினத்தில் பணியாளர்களின் ஊதியம் மற்றும் ஒய்வூதியம் ஆகியவற்றிற்கு 64 சதவீதத்திற்கு மேல் செலவிடப்படுவதால் இப்பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளது.

<u>விவரம் பின்வருமாறு :–</u>

| வ எண் | பணியிடத்தின் விபரம் | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | தற்போது உள்ளவர்கள் | காலியாகஉள்ள பணியிடங்கள் | அவசியம் தேவைப்படும் பணியிடங்கள் | தனியார் மூலம் நிரப்பபட வேண்டிய பணியிடங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | மின் கண்காணிப்பாளர் Grade II | 1 | – | 1 | 1 | – |
| 2 | மின் பணியாளர் நிலை I | 7 | 1 | 6 | 3 | 3 |
| 3 | மின் பணியாளர் நிலை II | 2 | 2 | – | – | – |
| 4 | குழாய் பொருத்துனர் நிலை I | 2 | 1 | 1 | 1 | – |
| 5 | தண்ணீர் திறப்பாளர் | 2 | 1 | 1 | 1 | 1 |
| 6 | மீட்டர் ரீடர் | 1 | – | 1 | 1 | – |
| 7 | தலைமை நீரேற்று நிலைய கிளினர் | 13 | 3 | 10 | 9 | 9 |
| 8 | பிட்டர் மேன் | 3 | – | 3 | 3 | 3 |
| | மொத்தம் | 31 | 8 | 23 | 22 | 16 |

மேற்கண்டவாறு முதலாவது குடிநீர் திட்டத்தில் இரு இயல்பு நீரேற்று நிலையம் ஒரு குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் இரு நீரேற்று நிலையம், 18.00 இலட்சம் லிட்டர், 9லட்சம் லிட்டர் கொண்ட இரு நீர்த்தேக்க தொட்டிகள் 1.50 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி 60 கி.மீ துரத்திற்கு பகிர்மான குழாய்கள் ஆகியவை பராமரிக்கப்பட்டு வருகிறது. குடிநீர் திட்டத்திற்கு தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களில் 23 பணியிடங்கள் காலியாக உள்ள நிலையில் பழைய முதலாவது குடிநீர் திட்டத்தினை பராமரிப்பு செய்வதில் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. பணியாளர் பற்றாக்குறையால் குடிநீர் பம்பிங் செய்வதில் இடையூறு ஏற்பட்டு பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வதில் பாதிப்படையும் சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. இந்நிலையில் பொது மக்களுக்கு சீரான குடிநீர் வழங்கும் பொருட்டு பழைய முதலாவது திட்டத்தின் மேற்படி இரு இயல்பு நீரேற்று நிலையத்தில் தற்போது உள்ள பணியாளர்களை காவேரி ஆற்றின் கரையோரத்தில் உள்ள RAW Water Pumb House ல் பணிக்கு அமர்த்தி கொள்ளலாம்.

| வ எண் | பணியிடத்தின் விபரம் | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | தற்போது உள்ளவர்கள் | பழைய முதலாவது குடிநீர் திட்டத்தில் இயல்பு நீரேற்று நிலையத்திற்கு (RAW Water Pump House) பணியமர்த்த தேவைப்படும் பணியாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | மின் பணியாளர் நிலை I | 7 | 1 | 1 |
| 2 | மின் பணியாளர் நிலை II | 2 | 2 | 2 |
| 3 | தலைமை நீரேற்று நிலைய கிளினர் | 10 | 3 | 3 |

சேலம் கேம்ப் பகுதியில் உள்ள பழைய முதலாவது திட்டத்தின் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம், ( Water Treatment Plant, clear water reservoir இரு நீர்த்தேக்க தொட்டிகள், ஒரு மேல்நிலை நீர்தேக்க தொட்டி இரு நீருந்து நிலையங்கள், ஆகியவற்றினை பராமரிக்க தனியார் மூலம் (Out Sourcing ) ஏற்பாடு செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது.

எனவே மேற்கண்ட விவரப்படி காலிப்பணியிடங்களில் மின் கண்காணிப்பாளர் நிலை II பணியிடம் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் பதவி உயர்வில் நிரப்பப்பட வேண்டிய பணியிடமாகும்.மேலும் குழாய் பொருத்துனர் பணியிடமும் தவிர்த்து கீழ்க்கண்ட பணியிடங்களுக்கு பழைய முதலாவது குடிநீர் திட்டத்தினை பராமரிக்க அவசியம் தனியார் மூலம் (Out Sourcing ) முறையில் நிரப்பப்பட வேண்டி உள்ளது.

| வ எண் | பணியிடத்தின் விபரம் | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | தற்போது உள்ளவர்கள் | தனியார் மூலம் நிரப்பப்பட வேண்டிய பணியாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | மின் பணியாளர் நிலை I | 7 | 1 | 3 மின் பணியாளர் நிலை II |
| 2 | தண்ணீர் திறப்பாளர் | 2 | 1 | 1 |
| 3 | நீரேற்று நிலைய கிளினர் | 13 | 3 | 9 |
| 4 | பிட்டர் மேன் | 3 | – | 3 |
| | மொத்தம் | 25 | 5 | 16 |

எனவே மேற்கண்ட விவரப்படி தேவைப்படும் பணியாளர்கள் மூன்று வருடத்திற்கு (Out Sourcing) முறையில் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒப்படைத்து பழைய முதலாவது குடிநீர் திட்டத்தின் சுத்திகரிப்பு நிலையம், நீருந்து நிலையம், நீர்த்தேக்க தொட்டிகள் , பகிர்மான குழாய்கள் ஆகியவற்றில் பராமரிப்பு பணியை மேற்கொள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் தரப்படுத்தப்பட்ட விலை விகிதப்பட்டியலின் படி தயாரிக்கப்பட்ட ஒரு வருடத்திற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.32.28/– இலட்சம் ஆகும். இத்தொகையினை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து செலவை மேற்கொள்ளவும், நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை, அவர்களிடம் அனுமதி பெற்று நடவடிக்கை எடுக்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. குடிநீர் திட்டத்தின் பராமரிப்பு செலவில் தகுதி மதிப்பீட்டு தொகைக்கும் குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்
2. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரனை அனுப்பி அனுமதி பெறவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 914/2019 /இ1)**
**தீர்மான எண். 77 நாள். 31.05.2019**
**அனுமதிக்கப்பட்டது.**

11) மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட நகராட்சி கட்டிடங்கள் மற்றும் நகராட்சி பள்ளி கட்டிடங்களுக்கு தற்போது பருவமழை காலமாக உள்ளதால், மழைநீர் சேகரிப்பு தொட்டிகள் பழுது சரிசெய்து பயன்பாட்டுக்கு கொண்டு வரவேண்டியிருப்பதால் அதற்கான தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2,00,000/– ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**(ந.க.எண். 2243/2019 /இ1)**
**தீர்மான எண். 78 நாள். 31.05.2019**
**அனுமதிக்கப்பட்டது.**

12) மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு 18 நகராட்சி வளாகத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையத்திற்கு குடிநீர் வசதி மற்றும் குழந்தைகளுக்கான கழிப்பிட வசதி போன்ற பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.3.60 இலட்சம் ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

(ந.க.எண். 2242/2019 /இ1)

தீர்மான எண். 79 நாள். 31.05.2019
அனுமதிக்கப்பட்டது.

ஆணையாளர் (ம) தனி அலுவலர்,
மேட்டூர் நகராட்சி.